--

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

O.S.No.253/2025 பெயர் : பிரசன்னாவெங்கடேஷ் நாள் : 03.06.2026

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தாவா சொத்து எந்த வருடம் யார் யாரால் வாங்கப்பட்டது என்றால், 1987-ல் நாச்சிமுத்து மற்றும் கமலாட்சி ஆகியோரால் கிரையம் பெறப்பட்டது. கமலாட்சி என்னை வளர்ப்பு மகனாக தத்தெடுத்துள்ளார். கமலாட்சிக்கு சட்டப்படியான வாரிசு என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். K.K.நாச்சிமுத்துவின் வாரிசுகளாகிய பிரதிவாதிகளுக்குள் பாகப்பிரிவினை ஏதாவது ஏற்பட்டதா என்றால், இல்லை. நாச்சிமுத்துவின் வாரிசுகளுக்கு பங்கு போக எனக்கு எவ்வளவு பாத்தியம் என்றால், கமலாட்சியின் பங்கு எனக்கு பாத்தியம்.